# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 539/பே/2016

ஆணை எண். 102/2017

நாள் : 08/05/2017

திரு. V. பழனிவேல் ராஜன்,
52, மதுரை மண்டபம் பிரதான சாலை,
திருப்புவனம் புதூர் - 630 611. – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
திருப்புவனம் பேரூராட்சி,
திருப்புவனம். – எதிர்மனுதாரர்

சிவகங்கை மாவட்டம், திருப்பவுனம் புதூர், 52, மதுரை மண்டபம் பிரதான சாலை முகவரியில் வசிக்கும் திரு. V .பழனிவேல் ராஜன் என்பவரது நாளிடப்படாத முறையீட்டு மனு பேரூராட்சிகளின் இயக்குநர் ந.க.எண்.4295/2015/இ2, நாள் 02.06.2016 வாயிலாகவும் மற்றும் உரிய படிவத்தில் 15.12.2016 நாளிட்ட முறையீட்டு மனுவும் இம்முறை மன்ற நடுவத்தில் பெறப்பட்டு 539/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் புதூர், 52, மதுரை மண்டபம் பிரதான சாலை முகவரியில் வசிக்கும் திரு. V. பழனிவேல் ராஜன், என்பவர் கீழ்க்காணும் குற்றச் சாட்டுகளைத் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்கக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார் :

(1) திருப்புவனம் பேரூராட்சியில் தினசரி சந்தை மற்றும் வார சந்தை ஏலம் எடுத்த திரு.க.ரவி என்பவர் பேரூராட்சி விலை நிர்ணயம் செய்த கட்டணத்திற்கு மாறாக போலி இரசீது மூலம் கூடுதலான கட்டணத்தை வசூல் செய்தது;

(2) காலாவதியான சால்வன்சி சான்றிதழ் அடிப்படையில் ஒப்பந்தப் பணிகளை மேற்கொண்ட ஒப்பந்ததாரர் திரு.க.ரவி மீது ஒப்பந்தச் சட்டம் மற்றும் இந்திய தண்டனைச் சட்டம் ஏமாற்றுதல் பிரிவுகளின் கீழ் செயல் அலுவலர் நடவடிக்கை எடுக்கத் தவறியது;

(3) தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தவறான தகவல்களை செயல் அலுவலர் வழங்கியது;

(4) கீழ் வகுப்பினரைச் சேர்ந்தவர்களுக்கு துப்புரவுப் பணி நியமனம் வழங்காமல் உயர்சாதி வகுப்பினரிடம் கையூட்டு பெற்றுக் கொண்டு செயல் அலுவலர் மூலமாக துப்புரவுப் பணி நியமனம் செய்தது மற்றும் மின் பணியாளரையும் முறைகேடாக நியமனம் செய்தது;

2. மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் குறித்து 15.12.2016 அன்று முறையீட்டு மனுதாரரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. ஒப்பந்ததாரர் திரு.க.ரவி தாக்கல் செய்த சால்வன்சி சான்றிதழ் போலி எனத் தெரிந்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கத் தவறியது மற்றும் போலி இரசீதுகள் மூலம் தினசரி மற்றும் வாரச் சந்தைகளில் வசூல் மேற்கொண்டது குறித்து விசாரணையின் போது உறுதி செய்தார். காலாவதியான சால்வன்சி சான்றிதழ் அடிப்படையில் திரு.க.ரவிக்கு ஒப்பந்தப்பணி தொடர்ந்து வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். மேலும், செயல் அலுவலர் திரு. கா. இராஜகோபாலன் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தான் கோரிய விவரங்களுக்குத் தவறான தகவல்களை அளித்தார் என்றும் உறுதி செய்தார். துப்புரவுப் பணியாளர் நியமனத்தில், ஏற்கனவே துப்புரவுப் பணி மேற்கொள்பவர்களுக்கு பணி வழங்காமல் பேரூராட்சி தலைவருக்கு வேண்டிய 2 நபர்களுக்கு, பணம் பெற்றுக் கொண்டு வேலை வழங்கியதையும் குறிப்பிட்டார்.

3. முறையீட்டு மனுதாரரின் குற்றச்சாட்டுகள் குறித்து, திருப்புவனம் பேரூராட்சி செயல்அலுவலர் தனது 30.11.2016 மற்றும் 24.01.2017 நாளிட்ட கடித எண் 989/2016-ல் அறிக்கைகள் தாக்கல் செய்ததுடன், 23.01.2017 அன்று நடைபெற்ற விசாரணைக்கும் வருகை தந்து விளக்கம் அளித்தார். திருப்புவனம் பேரூராட்சிக்குச் சொந்தமான தினசரி சந்தை மற்றும் கட்டணக் கழிப்பறை குத்தகை வசூல் செய்ய உரிமம் பெற்ற திரு.க.ரவி வழங்கிய சால்வன்சி சான்றிதழின் குறைபாடு கண்டறியப்பட்டு, அவருக்கு வழங்கப்பட்ட தினசரி சந்தை மற்றும் கட்டணக் கழிப்பறை குத்தகை உரிமங்கள் இரத்து செய்யப்பட்டன என்றும், அவர் தொடுத்த நீதிமன்ற வழக்கில் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் 30.06.2016 வரை கால நீட்டிப்பு வழங்கப்பட்டது என்று தெரிவித்துள்ளார். மேலும், மேற்படி இரண்டு இனங்களுக்கான

குத்தகையை 01.07.2016 முதல் பொது ஏலம் மூலம் குத்தகையை ஒப்படைக்க ஏலம் நடத்த அறிவிப்பு வழங்கப்பட்டது என்றும், அதனை எதிர்த்து திரு.க.ரவி தாக்கல் செய்த வழக்கில், அவர் செலுத்திய ரூபாய் 2,16,000/–,2016-17 ஆண்டு முழுமைக்கு உரிய குத்தகைத் தொகை என அவரால் நிரூபிக்க முடிந்தால், 29.06.2016 அன்று நடத்தப்பட்ட ஏலத்தினை மூன்றாவது நபருக்கு உறுதி செய்ய இயலாது என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதைத் தொடர்ந்து, மேற்படி இரண்டு இனங்களுக்குரிய குத்தகை பேரூராட்சி நிர்வாகம் மூலமே வசூல் செய்யப்பட்டு வருவதாகத் தெரிவித்தார். திரு.க.ரவி அவர்களுக்கு வழங்கப்பட்ட வாரச் சந்தை குத்தகையும் 30.09.2016 அன்றுடன் முடிவடைந்தது என்றும், மேற்படி குத்தகை காலம் முடிவடையும் முன்பே 2016-ஆம் ஆண்டு ஜூலை திங்களில் திருமதி.S.வெங்கடேஸ்வரி என்பவர் சென்னை உயர் நீதி மன்ற மதுரைக் கிளையில் வழக்கு ஒன்றினைத் தொடுத்துள்ளதாகவும் தெரிவித்தார். திருமதி.S.வெங்கடேஸ்வரி தொடுத்துள்ள வழக்கு எண் 12247/2017 நிலுவையில் உள்ள நிலையில், பேரூராட்சியின் வருமானத்தைக் கணக்கில் கொண்டு மேற்படி வாரச் சந்தையின் குத்தகைக் காலத்தை 2016-17 ஆண்டிற்கும் கால நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளதென்றும், இவ்வாறு கால நீட்டிப்பு வழங்குவதற்கு அரசு வழக்குரைஞரின் சட்டக் கருத்துரையும் பெறப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார். மேலும், திருப்பவுனம் பேரூராட்சியில் துப்புரவுப் பணியாளர் மற்றும் மின் பணி உதவியாளர் நியமனம் சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்தும் 30.11.2016 நாளிட்ட கடிதத்தில் பேரூராட்சியின் செயல் அலுவலர் தெளிவு படுத்தியுள்ளார். மேற்படி இரண்டு பணி நியமனங்களும் உரிய சுழற்சியின் அடிப்படையிலேயே பணி நியமனம் செய்யப்பட்டதாகவும், புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் பொய்யானதாகும் என்று தெரிவித்துள்ளார். திருப்புவனம் பேரூராட்சியில் 08.08.2015 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் மேற்படி பணி நியமனம் சம்பந்தப்பட்ட கோப்புகள் அனைத்தும் தீக்கிரைக்கு உள்ளானதால் அக்கோப்புகளை சமர்ப்பிக்க இயலவில்லை என்றும் தெரிவித்துள்ளார். இத்தீவிபத்து சம்பந்தமான வழக்கில் இந்நேர்வின் முறையீட்டு மனுதாரர் திரு. V. பழனிவேல் ராஜனும், துப்புரவுப் பணியாளர் திரு.ந.முத்தாராஜாவும் கைது செய்யப்பட்டு தற்பொழுது ஜாமினில் வெளிவந்துள்ளனர் என்று செயல் அலுவலர் விசாரணையின் போது தெரிவித்ததையும் இம் முறைமன்ற நடுவம் கவனத்தில் கொண்டுள்ளது. 21.02.2017 அன்று முன்னால் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.அ.அமானுல்லா என்பவரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மேற்குறிப்பிட்ட இரண்டு பணி நியமனங்களும் இன சுழற்சி அடிப்படையில் தான் மேற்கொள்ளப்பட்டது என உறுதி செய்தார்.

4. முறையீட்டு மனுதாரரின் குற்றச்சாட்டுகள், பேரூராட்சி செயல் அலுவலர் அளித்த அறிக்கை மற்றும் அவர் அளித்துள்ள வாக்குமூலம் கூர்ந்தாய்வு செய்யப்பட்டன. முறையீட்டு மனுதாரர் இரண்டு பிரதான குற்றச்சாட்டுகளைத் தெரிவித்துள்ளார். ஒப்பந்ததாரர் திரு.கரவி போலி இரசீதுகள் மூலம் தினசரி சந்தையில் நிர்ணயிக்கப்பட்ட தொகையைவிட கூடுதலாக வசூல் செய்தது மற்றும் காலாவதியான சால்வன்சி சான்றிதழ் வழங்கிய ஒப்பந்ததாருக்கு ஒப்பந்தப் பணிகளை வழங்கியது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் செயல் அலுவலர் தவறான தகவல் வழங்கியதையும் குறிப்பிட்டுள்ளார். திருப்புவனம் பேரூராட்சி தினசரி சந்தையில் 2015-16 ஆம் ஆண்டிற்கு, சில இனங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டண விவரங்கள் வருமாறு :-

| வ. எண் | இனம் | தொகை ரூ |
|---|---|---|
| 1 | லாரி, பஸ், டிராக்டர் (வண்டி 1 க்கு) | 20.00 |
| 2 | மினி லாரி, வேன், ஜீப், கார் (வண்டி 1 க்கு) | 10.00 |
| 3 | சைக்கிள் ரிக்ஷா, ஆட்டோ ரிக்ஷா(வண்டி 1 க்கு) | 5.00 |
| 4 | பழங்கள், காய்கறிகள் (கூடை 1 க்கு) | 5.00 |
| 5 | இலைக்கட்டு (1 க்கு) | 5.00 |

மேற்குறிப்பிட்ட கட்டண விதிகளுக்கு மாறாக ஒப்பந்ததாரர் கீழ்க்காணும் முறையில் கட்டணம் வசூலித்துள்ளார்.

| வ. எண் | இனம் | தொகை ரூ | இரசீது எண்கள் |
|---|---|---|---|
| 1 | கனரக வாகனம் (வண்டி 1 க்கு) | 50.00 | 99 |
| 2 | ஆட்டோ வேன் (வண்டி 1 க்கு) | 40.00 | 38,45,60,77,78,85,86 |
| 3 | காய்கறி கடை மற்றும் இலைக் கடை (1 க்கு) | 25.00 | 60,72,96,98 |

60 எண்ணுள்ள இரண்டு இரசீதுகள் ஒரே நாளில் காய்கறி கடை, இலைக் கடை மற்றும் ஆட்டோ, வேன் எனக் குறிப்பிட்டு வழங்கப்பட்டுள்ளன. ஒப்பந்ததாரர் வழங்கிய இரசீதுகள் பேரூராட்சி நிர்ணயம் செய்த படிவத்தில் உள்ளதா என்றும் தெரியவில்லை. ஒப்பந்ததாரர் வாடிக்கையாளர்களிடம் கூடுதலாகவே கட்டண வசூல் செய்துள்ளதாகத் தெரியவருகிறது. எனவே, இது குறித்து உரிய பதிவேடுகளைப் பார்வையிட்டு சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளலாம் என இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. மேலும், கூடுதலாக கட்டணம் வசூலிக்கப்பட்டுள்ளது என உறுதிப்படுத்தும் நிலையில், ஒப்பந்ததாரர் மீதும் உரிய விதிகளின் கீழ் நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்யப்படுகிறது.

5. ஒப்பந்ததாரர் திரு. க. ரவி அவர்களுக்கு 25.01.2001 நாளிட்ட A3/496/2001– என்ற எண்ணில் சால்வன்சி சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி சால்வன்சி சான்றிதழின் காலம் 24.01.2002 அன்றே முடிவடைந்து விட்டது. எனினும், காலாவதியான மேற்குறிப்பிட்ட சான்றிதழ் அடிப்படையில் 2015–16–ஆம் ஆண்டில், திரு. க. ரவி அவர்களுக்கு ஒப்பந்தப் பணி வழங்கப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரர், பேரூராட்சித் தலைவரின் சகோதரர் என்ற உறவு முறையினால் உரிய சால்வன்சி சான்றிதழை பெறாமல் ஒப்பந்தப் பணி வழங்கப்பட்டுள்ளது எனக் கருத நேரிடுகிறது. எனவே, இம்முறைகேட்டிற்கு காரணமான செயல் அலுவலர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. காலாவதியான சான்றிதழை வைத்து ஒப்பந்தப்பணிகளை மேற்கொண்ட ஒப்பந்ததாரர் மீது ஒப்பந்த சட்டம் மற்றும் இந்திய தண்டனைச் சட்டம், ஏமாற்றுதல் ஆகிய பிரிவுகளில் மேல்நடவடிக்கை தொடரலாம் என சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் தனது 15.04.2016 நாளிட்ட கடித எண். அ 2/8/2015–ல் தெரிவித்துள்ளார். அதன்படி ஒப்பந்ததாரர் திரு. க. ரவி அவர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் இயக்குநரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017– ஆம் ஆண்டு, மே திங்கள், 8–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

12-5-17

12/5/17

பெறுநர்

1. திரு. V. பழனிவேல் ராஜன்,
52, மதுரை மண்டபம் பிரதான சாலை,
திருப்புவனம் புதூர்- 630 611.

2. செயல் அலுவலர்,
திருப்புவனம் பேரூராட்சி, திருப்புவனம்.

3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
குறளகம், சென்னை – 600 108.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்